

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய சார்பில் திமுக தலைவர் –முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கும் விழா காக்களூரில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில், மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையற்றி பொதுமக்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இதில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., பேச்சாளர்கள் சைதை சாதிக், கா.ராஜராஜேஸ்வரி, கே.ஜெ.ரமேஷ், காயத்ரிஸ்ரீதரன், த.எத்திராஜ், கே.கே. சொக்கலிங்கம், கே.தரணி, எஸ்.சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே.சீனிவாசன், டி.எம்.ராமச்சந்திரன், எஸ்.பரமேஸ்வரன், டி.தயாளன், எஸ்.சௌந்தரராஜன் உள்பட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கிளை கழக செயலாளர்கள் கழக இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் 30 'அ' வட்டக் கழகத்தின் சார்பில் வட்ட கழக செயலாளர் டி. சுந்தரம் ஏற்பாட்டில் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் எஸ்.நந்தகோபால், திருமலை, ஜி.துரைசாமி, புத்தகரம் ஈ.ஏழுமலை, எம்.சரவணன், டாக்டர் ஜி.பார்த்தசாரதி, சிவில் எம்.செல்வம், இ.ராமன், எஸ்.பி.கண்ணன், பரமேஸ்வரி, அபிப் ரஹ்மான், ஏ.வி.முருகன், எஸ்.சி.என்.ராஜி, கே.நரேந்திரன், செண்பகராஜ், வி.பாஸ்கர், காஞ்சி சண்முகம், வெங்கட்ராமன், கருணாநிதி, பி. சுரேஷ், சக்கரபாணி, க.வெற்றிவேல், எஸ்.முத்து, டிவிஎஸ். கோபி, டி.எஸ்.உதயநிதி, பிஎஸ்என்எல் குமார், டி.கோபால், ரஜினி சுரேஷ், தேவேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பல்லாவரம் தொகுதியில் 'கோ - ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையம் அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – பல்லவபுரம் இ.கருணாநிதி வலியுறுத்தல்!

**சென்னை, மார்ச் 25 -**

**சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது பேசிய பல்லவபுரம் தொகுதி கழக உறுப்பினர் இ.கருணாநிதி, "பல்லாவரம் தொகுதியில் 'கோ - ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையம் அமைத்திட வேண்டும்!" என வலியுறுத்தினார்.**



பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**இ.கருணாநிதி:** பல்லாவரம் தொகுதியில் கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? ஆம் எனில், எப்போது?

**அமைச்சர் ஆர்.காந்தி:** பல்லாவரம் அருகில் 12 கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரம் விற்பனை நிலையமும், 9 கிலோ மீட்டர் தொலைவில் மடிப்பாக்கம் விற்பனை நிலையமும் மற்றும் 13 கிலோ மீட்டர் தொலைவில் வேளச்சேரி விற்பனை நிலையமும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.

பல்லாவரம் பகுதியிலுள்ள மக்கள் இந்த மூன்று விற்பனை நிலையங்களின் மூலமாக பயன்பெற்று வருகின்றனர். கோஆப்டெக்ஸின் https://www.cooptex.gov.in என்ற இணையதளம் மூலம் இணைய வழியாக பல்லாவரம் தொகுதியிலுள்ள வாடிக்கையாளர்கள் கொள்முதல் செய்து பயனடையலாம்.

எனவே, பல்லாவரம் தொகுதியில் கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**இ.கருணாநிதி:** அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுவாக, சென்னை புறநகரில் தாம்பரம், பல்லாவரம் தொகுதிகளில் மக்கள் அதிகமாக உள்ளனர். இப்போது கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் மூலமாக சென்னையிலும் காஞ்சிபுரத்திலும்தான் அதிகளவில் விற்பனை ஆகிக் கொண்டிருக்கின்றன. ஆனால், முக்கியமாக, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் தனியாருடைய விற்பனை நிலையங்கள்தான்இதை அதிகமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆகவே, மிகப் பெரியளவில் தாம்பரம், பல்லாவரம் தொகுதிகளில் கோஆப்டெக்ஸ் நிறுவனம் அமைக்க அரசு முன்வருமா-

**அமைச்சர் ஆர்.காந்தி:** கோஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் சுமார் 150 விற்பனை நிலையங்களை மக்கள் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அவை 11 மண்டல அலுவலகங்கள் கட்டுப்பாட்டில் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. அந்த விற்பனை நிலையங்களில் விற்பனை வாய்ப்பு, இலாபகரமாக இருந்தால், அங்குள்ள மக்களின் தேவைக்கேற்ப ஆய்வு செய்து விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**இ.கருணாநிதி:** கழகத் தலைவர் தளபதி அவர்கள் 1953 ஆம் ஆண்டு பிறந்தார். ஆகவே, அந்த நாளில் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓர் அறிவுரையை கலைஞருக்கு வழங்கி தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிகளையெல்லாம் எல்லா இடங்களிலும் விற்பனை செய்ய வேண்டுமென்ற ஓர் அறிவிப்பை வழங்கினார்கள். அதன் பெயரிலே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும் கலைஞர் அவர்களும் தேங்கிக் கிடந்தவற்றையெல்லாம் விற்பனை செய்து, நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்கின்ற வகையில் உதவியை செய்தவர் நம்முடைய கலைஞர் அவர்கள்.

அதேபோன்று, தளபதி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திராவிட மாடல் ஆட்சியில், இன்றைக்கு இலவச மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சியில், நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்கின்ற வகையில் தமிழகத்தில் இருக்கின்ற பெரிய நகரங்களிலெல்லாம் கோஆப்டெக்ஸ் நிறுவனங்கள் தனியாருக்கு நிகராக அமைக்க அரசு முன்வருமா? இந்தியாவிலே இருக்கின்ற கோஆப்டெக்ஸ் நிறுவனங்கள் பல மாநிலங்களில் எத்தனை இருக்கின்றன?

**அமைச்சர் ஆர். காந்தி:** கிட்டத்தட்ட மொத்தம் 150 Co optex showrooms இருக்கின்றன. அவற்றில் தமிழ்நாட்டில் 106 ம், பிற மாநிலங்களில் 44ம் இருக்கின்றன. அந்த 44ல், ஆந்திரப் பிரதேசத்தில் 8, தெலுங்கானாவில் 3, புதுச்சேரியில் 2, கேரளாவில் 3, கர்நாடகாவில் 7, மகாராஷ்டிரா 7, கோவாவில் 2, குஜராத்தில் 1, ஒரிசாவில் 3, மேற்கு வங்காளத்தில் 1, புதுடில்லியில் 3, உத்திரபிரதேசத்தில் 3, பீகாரில் 1 என மொத்தம் 44 இருக்கின்றன. மீதம் 106 தமிழ்நாட்டில் இருக்கின்றன.

கோஆப்டெக்ஸில் அவர் சொன்னதுபோல், சென்ற மாதம் ஜெய்பூரில், 960 sq.ft. அளவிலான நம் இடத்தில், construction start செய்து, அங்கே இல்லை, இந்த மாதம் by Rajasthan Police Housing Corporation மூலமாக அங்கே complete செய்கிறோம். அதற்கு Government subsidy ரூ.25 இலட்சம், கோஆப்டெக்ஸ் fund ரூ.41.66 இலட்சம். அதே போல், சென்ற வாரம் ஆந்திர பிரதேசம், தெலங்கானாவில் showroomஐ modernize செய்து open செய்தோம். அதற்கு BJP Governmentன் Hon'ble Minister of Coal and Mines Thiru Kishan Reddy அவர்களும், Transport Minister Thiru Ponnam Prabhakar அவர்களும் வருகைபுரிந்தனர். அனைவரும் அங்கு வந்து பார்த்துவிட்டு, நிச்சயமாக இதுபோன்ற varieties எங்குமில்லை, இங்கே வந்து நீங்கள் நல்ல முறையில் செயல்படுகிறீர்கள் என்று நம் அரசாங்கத்தைப் பாராட்டினார்கள்.

மறுநாள் விஜயவாடாவில் showroomஐ open செய்தோம். Hon'ble Minister of Backward Classes Welfare and Handlooms and Textiles, Commissioner of Textiles எல்லோரும் கலந்து கொண்டு மிகவும் பாராட்டினார்கள். அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் என்ன நினைத்தார்களோ, அதன்படி நமது திராவிட மாடல் தலைவர் தளபதி அவர்கள் இன்றைக்கு இந்தத் துறையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### வை. ம.அருள்தாசன் ஏற்பாடு! திருவொற்றியூர் மேற்கு பகுதி 2–வது வட்டத்தில்

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாள் : மாபெரும் கோலப் போட்டி!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்! டி. சேகர் முன்னிலை!

சென்னை,மார்ச்.25-

சென்னை வடகிழக்கு திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு 2 வது வட்டம் நேருநகரில் 23.3.2025 அன்று திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் மாபெரும் கோலப் போட்டி நடைபெற்றது. இக் கோலப்போட்டியில் 300க்கும் மேற்பட்ட பொதுமக்கள், மாணவிகள் சாதனைகளை விளக்கும் விதமாக பல்வேறு திட்டங்களை விளக்கி வண்ணக் கோலமிட்டனர் உற்சாகமாக பங்கேற்றனர்.

இப்போட்டியை மாவட்ட கழக செயலாளர் - மாதாவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கோலம் போட்டியை துவக்கி வைத்து முதல் மூன்று இடங்களை பிடித்த வெற்றியாளருக்கு ரொக்கம் மற்றும் நினைவு பரிசு வழங்கினார்.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற மாபெரும் கோலப் போட்டியினை வட்ட கழக பொறுப்பாளர் டி.சேகர் வரவேற்பில் மாவட்ட சமூக வலைத்தள பொறுப்பாளர் எஸ். தாமரை, பகுதி மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் க. சாமுண்டீஸ்வரி ஆகியோர் ஒருங்கிணைத்தார்கள்.

இந்நிகழ்வில் ஏ. இந்துமதி, எம். வஜ்ரவேல், ந. ராம்குமார், ரா. மோகனசுந்தரம், எம் . கோமளவல்லி, ஆர்.நவகுமார், வை. ம.கண்ணதாசன், டி .சக்கரவர்த்தி, வை. சின்னையன், மு. கார்த்திக், எஸ்.ராஜேஷ் , டி. எஸ்.மணி,கே. பாலு, ரா. மதன்குமார், டி.கண்ணன், எஸ்.தேவி, கோ.பூங்கொடி, டி.ஞானசேகர், பா. கலைராஜ், ஆர் . நரேன்குமார், ரா.வசந்திராஜ், பி.வித்யா, சி.முத்துக்குமார், ஜெ.மாரிமுத்து, கே.கோகுலகிருஷ்ணன், எஸ்.கௌதம், ஜெ. விக்னேஷ், இ.சங்கர், எஸ். பிரசாந்த், கார்த்திக், வி.தேசப்பன், ஆர்.பாலாஜி ஜெ.பிரேம்குமார்,

எஸ்.ரமேஷ்ரோனி, ஆர். காம்ளி, கே.இ. சங்கர், எஸ் .வினோத் , மற்றும் மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதி கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், கழக உடன்பிறப்புகள் கிராம நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வேலூரில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி!

வேலூர், மார்ச் 25 -

வேலூர் மாநகர தி.மு.க. சார்பில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் மேயர் சுஜாதா கலந்து கொண்டனர். வேலூர் மாநகர தி.மு.க. சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு சார்பில் ரமலான் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி பேபி மகாலில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு மாநகர செயலாளர் ப.கார்த்த்தி கேயன் எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார்.

மாவட்ட அவைத்தலைவர் த.அ.முகமதுசகி, மேயர் சுஜாதா ஆனந்தகுமார் முன்னிலை வகித்தனர்.

மாநில சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் காலபாஎன்ற அப்துல்மஜீத் அனைவரையும் வரவேற்று பேசினார்.

பின்னர் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை மாநகர செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்.

பின்னர் 225பேருக்கு குர்ஆன் புத்தகத்தை மேயர் சுஜாதா ஆனந்தகுமார் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர்கள் வி.ஜி.கே.சுந்தர விஜி, பாலமுரளி கிருஷ்ணா, மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர் வி.எஸ்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


